பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை – 4

13 09 2025 SATURDAY 6 45 AM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, வடகிழக்கு மாநிலங்களில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று தொடங்கி வைக்கிறார்.

2. மத்திய அரசின் பல்வேறு திட்டங்களால், நாட்டில் ஏழைகளின் எண்ணிக்கை 26 சதவீதமாக குறைந்துள்ளது என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில், 52 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில் ஜவுளி, பனியன் உட்பட பாரம்பரிய தொழில்கள் நலிவடைந்து வருவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Jaismine, Nupur ஆகியோர் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி, மிஸோரம், மணிப்பூர், அஸ்ஸாம் மாநிலங்களில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

மிஸோரம் தலைநகர் Aizawl-ல் இன்று காலை நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், 9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டங்களை தொடங்கிவைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் அவர் உரையாற்றவுள்ளார்.

தனது பயணத்தின் அடுத்தகட்டமாக மணிப்பூர் செல்லவுள்ள அவர், அம்மாநிலத்தில் 8 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார். முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

பின்னர், இன்று மாலை அஸ்ஸாம் செல்லும் பிரதமர், குவஹாத்தியில் நடைபெறவுள்ள பிரபல பாடகரும், கவிஞருமான மறைந்த Bhupen Hazarika நூற்றாண்டு கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

நாளை, அஸ்ஸாம் மாநிலத்தில் 18 ஆயிரத்து 530 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக. நாட்டில் ஏழைகளின் எண்ணிக்கை 26 சதவீதமாக குறைந்துள்ளது என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

விழுப்புரம் அருகே, ஆரோவில் அறக்கட்டளையின் சார்பில் நடைபெற்ற இந்திய குடியரசின் சாதனைகள் - சாவல்கள் மற்றும் வருங்கால திட்டங்கள் என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய அவர்,

*நாட்டின் 200 மாவட்டங்களில் மாவோயிஸ்ட் தீவிரவாதம் இருந்ததாகவும், தற்போது அந்தப் பகுதிகள் அமைதி நிலைக்கு திரும்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.*

*நீண்டகாலமாக வன்முறையால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மாநிலங்களில் பல்வேறு குழுக்களுக்கு இடையே நிலவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டதால், அமைதி திரும்பியுள்ளது என்றும் ஆளுநர் கூறினார்.*

*வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கி நாடு முன்னேறி வருவதாகவும், இதற்கு மக்கள்தொகை ஒரு சவாலாக இருந்தாலும். மத்திய அரசு அதனை எதிர்கொள்ளும் என்றும் திரு. ஆர்.என். ரவி தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில், 52 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*

*சென்னை, பெரம்பூரில் இந்த வாரியத்தின் சார்பில், சுமார் 300 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 2 ஆயிரத்து 480 அடுக்குமாடி குடியிருப்புகளை நேற்று மாலை திறந்து வைத்து அவர் பேசினார்.*

*18 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும் தமிழக அரசு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*வடசென்னையில் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, மாநில அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.*

*மகளிர் உரிமைத் தொகை வேண்டி விண்ணப்பித்து, விடுபட்டவர்களுக்கு விரைவில் அதற்கான தொகை அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*தமிழகத்தில் ஜவுளி, பனியன் உட்பட பாரம்பரிய தொழில்கள் நலிவடைந்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*

*திருப்பூரில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், அமெரிக்காவின் வரிவிதிப்பால் திருப்பூரில் பின்னலாடை தொழில்கள் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளதாகவும், இதற்கு மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் கேள்வி எழுப்பினார்.*

*திமுக ஆட்சியில் கடந்த நான்கரை ஆண்டுகளில் தொழில் நிறுவனங்களோடு மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 77 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறுவது தவறான தகவல் என்றும் அவர் தெரிவித்தார்.*

*பத்தரை லட்சம் கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டிருந்தால், குறைந்தபட்சம் 25 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கும் என்றும், ஆனால் உண்மையில் வேலை கிடைக்காத நிலைதான் உள்ளது என்று திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.*

*>>>>><<<<<*

*தில்லியில் பட்டாசு வெடிக்க விதிக்கப்பட்ட தடையை ஏன் நாடுமுழுவதும் நீட்டிக்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.*

பேரியம் நைட்ரேட் போன்ற வேதிப் பொருட்கள் பட்டாசு தயாரிப்பில் பயன்படுத்தப்படுவதால், மக்களின் உடல் நலனுக்கும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதாக கூறி, தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், பசுமை பட்டாசுகளை மட்டுமே தயாரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

இந்நிலையில், பட்டாசு வெடிப்பதற்கும் தடை விதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், கடந்த ஆண்டு தில்லியில் மட்டும் பட்டாசு விற்பனைக்கும், வெடிப்பதற்கும் தடை விதித்தது.

இந்த தடையால் பட்டாசு தொழிலை நம்பியுள்ள லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு, இதுகுறித்து மத்திய அரசு பதிலளிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணை முழுக்கொள்ளவை எட்டியுள்ளதால், உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

நீர்வரத்தைப் பொறுத்து 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் வரை வெளியேற்ற வாய்ப்புள்ளதால், தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் உள்ள திருக்கோவிலூர், அரகண்டநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் கரையோரம் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில், விழுப்புரம் மாவட்டத்தில், விழுப்புரம், திண்டிவனம், விக்கிரவாண்டி உள்ளிட்ட பகுதிகளில் நேற்றிரவு இடியுடன் கூடிய கனமழை பெய்ததால். தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. பல இடங்களில் முன்னெச்சரிக்கை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

இயற்கை உரத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகளிடம் எடுத்துரைக்கும் பிரதமரின் Pranam திட்டத்தின் கீழ், காரைக்கால் பகுதி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த பயிற்சி முகாமில் கலந்து கொண்ட விவசாயி மணிகண்டன், இயற்கை உரத்தால் மண்வளம் பாதுகாக்கப்படுவதோடு, விளைச்சலும் அதிகரித்துள்ளது என்று கூறினார்.

(சவுண்ட் பைட் – விவசாயி 32 செகண்ட்ஸ்)

விவசாயிகளுக்கு இயற்கை உரங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்று பொதுத்துறை நிறுவனமான சென்னை உர நிறுவனத்தின் உயர் அலுவலர் திரு. கணேஷ் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – கணேஷ் 20 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

நேபாள நாட்டின் இடைக்கால பிரதமராக திருமதி. Sushila Karki பதவியேற்றார்.

>>>>><<<<<

கத்தார் நாட்டின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதை அடுத்து ஐக்கிய அரபு எமிரேட், இஸ்ரேல் தூதரை அழைத்து கண்டனம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

கர்நாடக மாநிலம், Hassan மாவட்டத்தில் நேற்று நிகழ்ந்த சாலை விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்

>>>>><<<<<

தோட்டக்கலை துறையில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை ஆராய, பெரு நாட்டிலிருந்து அதிகாரிகள் அடங்கிய குழு, திரிபுரா வந்துள்ளது.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாயிகள் கொண்டு வரும் நெல் முழுவதையும் கொள்முதல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

>>>>><<<<<

சேலம் அரசு மருத்துவமனையில் ஸ்கேன் மூலம் கருவில் உள்ள சிசு ஆணா? பெண்ணா? பாலினத்தை கண்டறிந்த அரசு மருத்துவர் உட்பட இரண்டு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு புதிய குளிர்சாதன வசதி கொண்ட பேருந்து சேவை தொடங்கப்பட்டதுள்ளது.

>>>>><<<<<

சென்னையில் வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக, வெள்ளத்தடுப்பு பணிகள் முடிக்கப்படும் என்று மேயர் திருமதி. பிரியா தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Jaismine, Nupur ஆகியோர் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் Jaismine, வெனிசுலாவின் Carolina-வை வென்றார்.

80 கிலோ எடைப்பிரிவில் Nupur, துருக்கியின் Duztas Seyma-வை வென்றார்.

>>>>><<<<<